அனுப்புநர்

தண். வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 6

பெறுநர்

அனைத்து ஆசிரியர் பெருமக்கள்
(முகாம் அலுவலர் வாயிலாக),

ந.க. எண் 294642 /H 2/ 2019 நாள் . 5 .04.2019

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - இடைநிலை/ மேல்நிலை பொதுத் தேர்வுகள், மார்ச்–2019 – 06.04.2019 அன்று முகாம் பணி நடத்துவது – குறித்து.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்– 03.04.2019.

---

இடைநிலை/ மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மார்ச்–2019 பொதுத் தேர்வுகள் நடந்து முடிந்து விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணி மாநில அளவில் மும்முரமாக ஆசிரியர்களின் முழு ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டே அரசுப் பொதுத் தேர்வுகளை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களது நலன் கருதி தேர்வுப் பணி / தேர்தல் பணிகள் பாதிக்காதபடி முன்கூட்டியே தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகளும் முன்கூட்டியே நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் எதிர்பாராத விதமாக நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறும் நாளும் அறிவிக்கப்பட்டுவிட்ட படியால் அனைவரும் பெரும் நெருக்கடிக்கு ஆளாகிவிட்டோம். இருப்பினும் தேர்வுப்பணி மற்றும் தேர்தல் பணி இரு பணிகளையும் நமது இரு கண்களாக நினைத்து இரண்டுப் பணிகளையும் குறித்த காலத்தில் குறைவின்றி செய்து முடித்திட கடமையுணர்வு மிக்க ஆசிரியப் பெருமக்களால் தான் முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை. மேலும் இது போன்ற ஓர் இக்கட்டான சூழல் இனி எப்பொழுதும் ஏற்படாது. இது தவறான முன் நிகழ்வாக மாறிவிடும் என்ற அச்சம் யாரும் கொள்ள வேண்டாம் எனவும் கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே பெருந்தன்மையும், கடமை உணர்வும் கொண்ட ஆசிரிய பெருமக்களை 06.04.2019 அன்று பணிபுரியுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிலையில் 06.04.2019 அன்று தெலுங்கு வருடப்பிறப்பு அரசு விடுமுறை என்றாலும் தமிழக அரசால் தேர்வு எழுதியுள்ள மாணாக்கர்களின் தேர்வு முடிவு வெளியிடும் தேதி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்வர்களின் நலன் கருதியும் இப்பண்டிகையை கொண்டாடும் ஆசிரியர்கள் மற்றும் தொடர்ந்து பணியாற்ற உடல்நிலை ஒத்துழைக்காத ஆசிரியர்கள் தவிர இதர ஆசிரிய பெருமக்கள் மேற்படி விவரங்களைக் கருத்தில் கொண்டு கடந்த காலங்களில் வழங்கியது போல் தங்களின் முழு ஒத்துழைப்பினை நல்கி முகாம் பணியினை குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் சிறப்பாக முடித்து தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

5/4/2019.

இயக்குநர்

நகல்:

1. பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு
– தகவலுக்காக பணிந்து தெரிவிக்கப்படுகிறது.